Register as a N
paper Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:— சுபானு௵ புரட்டாதி௴ உகஉ (1943 அக்டோபர்௴ 7 வியாழக்கிழமை) [இல. ருக

## ருஷியாவில் ஜெர்மானியர் பின்வாங்குவதேன்?

### கோயபல்ஸ் விளக்கம்

லண்டன் அக் 3—

அரிவெட்டு விழாவை முன்னிட்டு ஜெர்மன் பிரசார மந்திரியான டாக்டர் கோயபல்ஸ் இன்று பெர்லின்ஸ் போர்ட்ஸ் பலஸில் றேடியோமூலம் ஒரு பிரசங்கஞ் செய்தார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:—

'பொதுவுடைமைப் படைகளை ஜெர்மனியின் எல்லைக்கு வெகு தூரத்திலேயே தடுத்து வைக்கப் போதிய சக்தி நம்மிடமிருக்கிறது. சென்ற இரண்டுவருடங்களுக்கிடையில் ஏராளமான பிரதேசங்களை நாம் ஸ்வீகரித்துக்கொண்டிருந்ததாற்றான் நமது படைகள் சண்டையிலிருந்து பிரிந்துகொண்டு பின்வாங்கிவர முடிந்தது. நமது துணிவுடன் கூடிய உயர்ந்த இராணுவ தந்திரத்தையும் இது சுட்டிக்காட்டுகின்றது. இவ்விதம் பின்வாங்குவதனால் நாம் பிரதேச வசதியை எதிரிக்கு விட்டுக் கொடுக்கிறோமென்பது வாஸ்தவந்தானென்றாலும் இராணுவ முக்கியத்துவமுள்ள வசதிகளினால் இந்த நஷ்டம் ஈடு செய்யப்பட்டிருக்கிறது.'

இத்தாலியைப்பற்றிக் குறிப்பிடும்போது இந்த யுத்தத்திலிருந்து எவரும் கபடமாகத் தப்பிக்கொள்ள முடியாதென்பதற்கு இத்தாலியின் தலைவிதி உதாரணமாயிருக்கிறது. இந்த யுத்தம் அதிவேகமாகச் செல்லும் புகைவண்டியைப் போன்றது. அதிலிருந்து வெளியிற் குதிப்பவர் கழுத்தைத்தான் முறித்துக் கொள்ளுவர் என்று டாக்டர் கோயபல்ஸ் சொன்னார். அவர் மேலும் சொல்லியதாவது:—

"நாம் வெற்றிச் சிகரத்தின் உயர்வுக்கு ஏற விரும்பினால் இன்னும் மகத்தான கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தே தீரவேண்டும். நேசதேச விமானத் தாக்குதல்கள் சென்ற சில வாரங்களுக்கிடையிற் சிற்சில சமயங்களிற் சிறிது குறைந்திருக்கிறதென்றாலும் அந்த விமானங்களுக்குச் சேதங்களும் அதிகரித்து வருகின்றன. பறக்குங் கோட்டைவிமானங்கள் பறக்கும் சவப் பெட்டிகளாகும் காலமும் ஒன்று வரவே செய்யும். நமது யுத்தமுயற்சிக்கு உண்மையில் எதிரித் தாக்குதல்கள் எவ்வித பாதகமும் செய்யவில்லை."

இத்தாலிய ராஜவம்சத்தையும் படோக்ளியோவையும் கோயபல்ஸ் தாக்கிப் பேசியதாக ஜெர்மன் நியூஸ் ஏஜென்ஸி வெளியிடவில்லை. ஆனால், இதை ஜர்மன் ரேடியோ ஒலிபரப்பியது. கோயபல்ஸ் பேசுவதன் முன்னால் முசோலினியை விடுதலை செய்த ஜெர்மன் இரகசியப்பொலிஸ் அதிகாரி தமது 'வீரச் செயலுக்கு'ப் பதக்கம் பெறுவதற்காகக் கூட்டத்திற்குச் சமுகமாயிருந்தார். அவருக்குத்தான் கோயபல்ஸ்பிரசங்கத்தையும் விட அதிக உற்சாகத்துடன் கரகோஷஞ் செய்து வரவேற்பளிக்கப்பட்டது.

வசாவிளான் அநர்த்தம்

## 60 தொழிலாளிகள் விடுதலை

### பலாலியில் நடந்த விசாரணை

வசாவிளான் பலாலி எல்லைக்குள் கொலைசெய்தார்களென்றும் கலகம் விளைத்தார்களென்றும் வேலையாட்கள்மீது தொடரப்பட்ட வழக்கை மல்லாகம் நீதிபதி மிஸ்டர். டப்ளியூ. ஜீ. ஸ்பென்லர் நேற்று முன்தினம் அவ்வெல்லைக்குள் ஒரு கூடாரத்தின் கீழிருந்து விசாரணை செய்தார்.

உதவிப்பொலிஸ் சுப்பிரின்டெண்டன் மிஸ்டர். பி. டீ. எஸ். செனவிரத்னவும் சுன்னாகம் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் K. D. ரூபனும் வழக்காளி பக்கச் சாக்ஷிகளை விடுத்தனர்.

பலாலியைச் சேர்ந்த வேலன் பொன்னன் (36) என்னுஞ் சாக்ஷி கூறியதாவது:—

பாலி என் மனைவி. குறித்த சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 5½ மணிவரையில் நானும் எனது மைத்துனன் கந்தன் பொன்னனும் கிணற்றடியில் நின்றோம். வசாவிளான் சந்திப் பக்கமாக ஒரு பெரிய கூக்குரல் கேட்டது. அந்த நேரத்தில் என்மனைவி பாலியும் அவள் சகோதரன் கந்தன் முத்தனும் (காலஞ் சென்றவன்) நான் நின்ற இடத்துக்கு 200 யாருக்கப்பாலுள்ள வீட்டில் நின்றார்கள். என் மனைவி பாலி ஓடிவந்து தொழிலாளிகள் தன் சகோதரனை அடிக்கிறார்கள் என்று சொன்னாள். நான் என் வீட்டுப்பக்கமாக ஓடினேன். என்வீடு எரிந்து கொண்டிருந்தது. நான் அந்த இடத்துக்குப் போக முன்பே இறந்த முத்தனை ஒரு தொழிலாளி மயிரிற் பிடித்துக்கொள்ள இரு தொழிலாளர்கள் அவனைக் கோடாலிப்பிடியால் மோதியதை நான் கண்டேன். இந்தச் சம்பவம் நடந்தது என் வீட்டிலிருந்து 30 யாருக்கப்பாலாகும். "என் என் மைத்துனனை அடிக்கிறீர்கள்" என்று சத்தமிட்டுக்கொண்டே நான் அவ்விடத்துக்கு ஓடினேன். தொழிலாளர்கள் என்மீது கற்களால் எறிந்தார்கள். நான் பயந்து ஓடிவிட்டேன். ஏறக்குறைய 50 தொழிலாளர்கள் ஒரு கூட்டமாக நின்றார்கள். (அவர்களில் 5 தொழிலாளர்களைச் சாக்ஷி அடையாளங் காட்டினார்) இருட்டியபின் முத்தன் தாக்கப்பட்ட இடத்துக்குப் போனேன். அவன் அவ்விடத்திலிருந்து சற்று தூரத்திற்கப்பால் கிடந்தான். நான் அவனைக் கூப்பிட்டேன். மறுமொழி இல்லை. முத்தனில் இரத்தக் காயங்கள் ஒன்றுங் காணப்படவில்லை. உரோஞ்சின காயங்கள் சில காணப்பட்டன. நான் அவனை வண்டியில் ஏற்றி முதலிற் பொலிஸ் நிலையத்துக்கும் பின் ஆஸ்பத்திரிக்குங் கொண்டு போனேன். என்வீடு முழுவதும் நெருப்பால் தகிக்கப்பட்டது. எனக்கு 500 ரூபாவரை நட்டமுண்டு.

அதன்பின், பொன்னன், வைரவ—கந்தையா, மாப்பாணர் மசுவலிங்கம், நாகமுத்து கந்தையா, கதிரிப்பிள்ளை செல்லையா, நாகமணி சினிக்குட்டி, சரவணமுத்து ஆறுமுகம், இன்னும் மூவர் ஆகியோர் சாக்ஷியங் கூறினர்.

அதன்பின், வேலன் மனைவி வள்ளி (30) கூறியதாவது:—

குறித்த தினத்தன்று பிற்பகல் 2 அல்லது 3 மணிவரையில் நான் பாயிற்படுத்தபடி குழந்தைக்குப் பால்கொடுத்துவிட்டுக் கிடந்தேன். யாரோ ஒருவன் (அவன் யாரென்று என்னாற் குறிப்பிடமுடியவில்லை) வந்து என் மார்பை அமுக்கினான். அப்போது நான் நித்திரையாயிருந்தேன். நான் சத்தமிட்டேன். அவன் தன் கையால் என்வாயைப் பொத்தினான். நான் மேலும் குழறினேன். அவன் ஓடிவிட்டான்."

நீதிபதி 104 தொழிலாளர்களில் 60 பேரை விடுதலை செய்தார். 3 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூவருட்பட 44 பேர்மீதுள்ள குற்றச்சாட்டின்விசாரணை அக்டோபர் மாதம்19-ம் திகதி தொடர்ந்து நடைபெறும்.

---

## 8-வது சேனை திட்டப்படி முன்னேறுகிறது

லண்டன் அக் 5—

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச இராணுவ மத்திய காரியாலயத்திலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:— இன்று யுத்த முனையிலிருந்து கடைசியாக எட்டிய தகவல்களிலிருந்து, நேசப்படைகள் தெற்கு மேற்கு கிழக்குத் திசைகளிலிருந்து மும்முரமாக முன்னேற ஆரம்பித்திருக்கின்றன வென்று தெரியவருகிறது. நாஜி தளகர்த்தரான கெஸ்ஸெல்ரிங்கின் துருப்புகள் இப்பொழுது தென் மத்திய இத்தாலியிலுள்ள குன்றுகளுக்குப் பின்வாங்கி வருகின்றன. வடக்கு நோக்கி முன்னேறும் 5வது 8வது சேனைகளின் வேகத்தைத் தளர்த்துவதுதான் இப்பொழுது சத்துருப் படைகளின் பிரதான நோக்கமென்று தெரிகிறது. வட இத்தாலியில் ஜெனரல் ரோமல் தனது படைப் பலத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்துகொண்டிருக்கின்றார். தினந்தோறும் நமது விமானப்படையும் சத்துருப்படைகளின் முயற்சிகளை அவலமாக்கி வருகின்றது. பிரிட்டிஷார் டெர்மோலி நகரைக் கைப்பற்றியதுடன் ஜெர்மானியரின் உயிர்நாடியான ஒரு புகையிரத ஜங்ஷனை இழந்துவிட்டார்கள். பொகியா நகரைச் சுற்றியுள்ள சமவெளியிலிருந்து சௌகரியமாகப் பின்வாங்குவதற்குக் குறித்த புகையிரத ஜங்ஷன்தான் அவர்களுக்குப் பெருந்துணையாக விருந்தது.

## வட்டாரத்தேர்தலும் வரியிறுப்போர் சங்கமும்

1943-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி சாயந்தரம் ஸ்ரான்லி றோட் 73-ம் நம்பர்க் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் வருகிற நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் பட்டினசங்கத் தேர்தலில் மேற்படி சங்க ஆதரவின் கீழும் அதன் உதவியோடும் அபேட்சகர்களாக வரவிரும்புவோர்கள் தங்கள் விருப்பத்தைச் சங்கக் காரியதரிசிக்கு அறிவித்துச் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இம்மாதம் 15-ம் திகதிக்குமுன் கைச்சாத்திடவேண்டுமென்று சர்வ சம்மதமாகத் தீர்மானிக்கப்பட்டதெனச் சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

---

## திருட்டுத்தனமாக இலங்கைக்கு வருதல்

### இந்தியத் தொழிலாளிகளுக்கு எச்சரிக்கை

இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர் செல்வது தடை செய்யப்பட்டிருந்தபோதிலும் இராமநாதபுரம், தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களிலிருந்தும், புதுக்கோட்டை திருவாங்கூர் ஆகிய சமஸ்தானங்களிலிருந்தும் தொழிலாளர்கள் திருட்டுத்தனமாகஇலங்கைசெல்வது பலமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று சென்னை அரசாங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையொன்று கூறுகிறது.

திருட்டுத்தனமாக இலங்கைக்கு வருபவர்கள் விஷயமாக இலங்கை அரசாங்கம் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ப் பிறப்பித்திருக்கும் உத்தரவை அவ்வறிக்கை குறிப்பிட்டு அவ்வுத்தரவிற்கு மாறாகத் திருட்டுத்தனமாக இலங்கைக்குச் செல்பவர்களுக்கு ஐந்துவருடகாலம் வரை சிறைத்தண்டனை அல்லது 10000 ரூபாய்வரை அபராதம் விதிக்கப்படலாமென்று கூறுகிறது.

---

## குஷ்டரோகிகளின் வேண்டுகோள்

### தீபாவலிப் பண்டிகை

தரும சீலர்களே!

வருடமொருமுறை வருகின்ற இந்துக்களின் புண்ணியதினமாகிய தீபாவலியன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும் புதுஆடை அணியவும் இந்த நோயாளர்களுக்கு ஆவலிருப்பதால் தரும சீலர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவியைப் புரியுமாறு தாழ்மையாய் நோயாளிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்:

இங்ஙனம்,
சைவப்பிணியாளர்
சங்கத்தின் காரியதரிசி
பெ. இராமசாமி
ஹெந்தலை குஷ்டரோக
வைத்தியசாலை
வத்தளை

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
புரட்டாதி௴ ௨௧௳ வியாழக்கிழமை

## யுத்தநிலை

ருஷிய முனையில் ஜர்மனியரை ருஷியர் பின்னிடச் செய்து தாம் முன்னர்ப் பறிகொடுத்தவைகளை மீளப் பிடித்துவருகிறார்களென்பது யுத்த சமாசாரங்களைக் கொண்டு அறியக்கிடக்கின்றது; இத்தலிய யுத்தமும் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினருக்கு வெற்றிப் பாட்டைத் தருகின்றதெனச் சொல்லத்தக்கதாக விருக்கின்றது. ஆனால் இற்றைக்குச் சில தினங்கட்குமுன் ஹிட்லருடைய கையாளாகிய டக்றர் கோபெல்ஸ் பேசிய பேச்சைக் கொண்டு யுத்தம் இப்போதைக்கு முடிவதற்கு ஏதுவில்லையென நாம் யூகிக்கவேண்டியிருக்கிறது. ருஷியாவில் ஜெர்மனியர் பின்னிடைந்து ஓடுவதைப்பற்றிச் சொல்லுமிடத்தில டக்றர் கோபெல்ஸ் "தாங்கள் அப்படிப் பின்னிடுவதும யுத்த உபாய முறையை உத்தேசித்தென்றும், சென்ற இரண்டுவருட காலமாகத் தாங்கள் போதிய நாட்டைக் கைப்பற்றிவிட்டதாகவும், இப்பொழுதும பகைவர் தம்நாட்டின் எல்லைக்குச் சமீபத்திற்றானும வராதபடி காப்பதற்குத் தங்களிடத்திலே போதிய ஆளும படையுமுண்டென்றும சொல்லுகிறார்; கோபல்ஸின வீரப்பேச்சை எவ்வளவிற்கு நிச்சயமென நம்பலாமென்பதைச் சொல்ல முடியவில்லை. ஆனாலும கோபல்ஸ் வார்த்தை முழுவதும பொய்யென்றெண்ணி ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் வாளாவிருத்தல முடியாது; பிறிதொரு இடத்தில டக்றர். கோபெல்ஸ் தாங்கள யுத்தத்திலே சற்று சோர்வடைந்திருந்தால, அது காலப் பெயர்ச்சியின விசித்திரசக்தியாலானதென்றும், பகைவருடைய லைசியப பெருக்கும ஆகாயப் படைப் பெருக்கும பயனில்லாமற்போகும நேரமும வருமென்றும, அந்த நேரத்திலே பறக்கும கோட்டைகளென்று சொல்லப்படும பிருத்தானிய அமெரிக்க ஆகாயவிமானங்களெல்லாமபறக்கும பிரேதப்பெட்டிகளாக மாறிவிடுமென்றும வீர பேசுகிறார்; இப்பேச்சிலே மூன்று பங்கு நிசமில்லாவிட்டாலும ஒரு பங்கு நிசமுண்டென நம்ப இடமுண்டு. ஏன்? சென்ற செப்டம்பர் மாசத்தின முதல இரண்டு வாரங்களிலும் ஐக்கியதத்துவராசசி

யத்தினருக்குரிய ஒரு கப்பலேனும் அமிழ்க்கப்படவில்லையென்று மிஸ்றர். ஜேர்ஜில் தெரிவித்தார்; அப்படிச் சொல்லிய அந்த நேரத்திலேயே ஒரு கூட்டம் யூ-வள்ளங்கள் அத்திலந்திக் சமுத்திரத்திலே தோன்றியதாகவும் ஐக்கிய தத்துவ அரசினருக்குரிய கப்பலொன்றை மோசமாகத் தாக்கியதாகவும் செய்தி எட்டுதலாயிற்று. மேலும் ஜப்பானியர் தங்களுடைய ஆகாயப்படையை இப்பொழுது நன்கு விருத்திபண்ணி வருகிறார்களென்றுஞ் சொல்லப்படுகின்றது; இவையெல்லாம் நிசமானால்,நிசமென்றே நினைத்துககொளளுதல் புத்தி, இப்போதைககு இந்த யுத்தம் முடிவுறுமெனச் சொப்பனத்தில நாம் நினைப்பதும் புத்திக்குத் தோஷமாகும்.

---

## கூலிக்காரரைக் கட்டுப்படுத்த வேண்டாமா?

கூப்பன் முறையில் அரிசி நெல் விலைப்படத் தொடங்கிய நாள் தொட்டுத் தொழிலாளரின் கூலி நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகின்றதென்று சொல்லலாம். ஆரம்பத்தில நாளொன்றுக்கு ஒரு ரூபா கூலியென்று வாங்கி வந்தவர்கள், கூப்பன் கட்டுப்பாடு தொடங்க ஒன்றேகால ரூபாவும், பின ஒன்றரை ரூபாவும், இப்பொழுது ஒன்றேமுக்கால் ரூபாவும், சில இடத்தில வசதி வாய்த்தால இரண்டு ரூபாவும் கூலிககாரர்கள வாங்கத் தலைப்பட்டுக் கொண்டனர்; இனி, கூலிக்காரருக்கிடையில இருக்கும ஒற்றுமை ஒரு அளவுக்குசசோரமாக வியாபாரஞ் செய்வோரிடத்தில மாத்திரங் காணலாமேயொழிய வேறு எசசாதியாரிடத்திலும எவ்வகையான தொழிலாளிகளிடத்திலும இல்லையென்று சொல்லலாம. ஒருவன குறைந்த கூலிக்கு அதாவது நீதியான கூலிக்கு வேலை செய்ய, அவன கூட்டத்தினர் அவனை விடமாட்டார்கள்; இதனால தொழில செய்வப்போரின கஷ்டமும பணச்செலவும நாளுக்கு நாள அதிகப்படலாயின."என இப்படி அநியாயமான கூலிகேட்கிறீர்கள" என்று தொழில் செய்விப்போர் கூலிக்கே செய்வோரைக் கேட்டால், "நாங்கள என்ன செய்வோம கள்ள அரிசியன்றிக் கண்டபடி ஏறிவிட்டது" என்று காரணங் காட்டுகிறார்கள்; சோர அரிசி வாங்கி உண்பதாக ஆவாகள காரணங் காட்டுவதே தவறு அல்லாமலும இந்தக் கூலிக்காரருக்கு, அரசினர் சாமானியமானவருக்குக் கொடுக்கும கூப்பனையுங் அரிசியைக் காட்டிலும் இடமடங்கு அதிகமமேலதிகமாகக் கொடுக்கிறார்கள்; அப்படியிருக்கவும் இந்தக்கூலிக்காரர் மேலதிகமாகக் கூலியப்பணமென்று வாங்குவதற்குக் காரணமென்ன?

இந்தக் கூலிக்காரர் இப்படி மேலதிகமான கூலி தரவேண்டு

மென அழுத்தி நின்றால், பயிரிடுமதொழில் செய்தல முடியாதென்கிறார்கள்; கூலிக்காரரைக்கேட்டால பயிரிடுவோருட்பலர் மோசமான விலைக்குச் சோரமாக நெல்லு விறபவர்தாமே, அதனாலேதான நாங்களும அரிசிக்கு மேலதிகமாகப் பணங்கொடுத்து வாங்கி உண்ணவேண்டியிருக்கிறது. அப்படித் தருவதால அவர்களுக்கு நஷ்டமில்லையே என்கிறார்கள். எனினும் பயிரிடுவோர் இந்த வியாபாரத்தினாலே பயிரிடாதொழிய, அப்படியான வயல்களை அதிகாரிகள ஏற்றுச் செய்வதாக, அந்த அதிகாரிகளும வயல் செய்வதற்குக் கூலிக்காரர் வேண்டுந்தானே; இப்படியெல்லாமிருந்தாலும் அரசினர் தொழிலாளிகளின கூலி விஷயத்திற்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தல ஆவசியகமாகும்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### "அப்படியானால் எனக்கு மகா சந்தோஷம்"

"நமது மகனும் மகளும் சின்னம்மாள் வீட்டிற்குப் போனார்களே, அங்கு நடந்த விசேஷமென்னவாம்; எங்கள் மகனுக்கு எல்லாஞ் சம்மதமாமோ" என்று முருகேசபிள்ளை தம் மனைவியாளைக் கேட்க, மனையாள் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் ஒன்றுந் தவறாமற் சொல்லி, தங்கள் மகன் அந்தப் பெண்ணில் உண்மையான விருப்பங் கொண்டிருக்கிறானென்பதையும் புருஷனுக்குச் சொன்னாள்; "ஐந்து வருடந் தவணையிடாமல், இப்பொழுதே கல்யாணஞ் செய்து கொள்வதற்கும் எங்கள் மகனுக்குச் சம்மதந்தானே" என்று மீட்டும் முருகேசபிள்ளை சண்பகத்தம்மாளைக் கேட்டார். "அதை நான் பிரித்துக் கேட்கவில்லை, நாங்கள் கேட்டால் எங்கள் பிள்ளை உடன்படுவானென்றுதான் நினைக்கிறேன்" என்றாள் மனைவி. "அப்படி உடன்பட்டால் அது எனக்கு ஆநந்தம். ஆனால் எங்கள் பிள்ளையின் படிப்பிற்கு ஒரு போது இடையூறாக விருக்குமோ என்று பயப்படுகிறேன்" எனச் சிந்தனையோடு சொன்னார் முருகேசபிள்ளை; "அந்தக் கருமத்தை எங்கள் மகனிடம் கேட்டறிந்துகொண்டு அதற்கு இசையச் செய்துகொள்ளலாம்" என்றாள் மனைவி. "சரி அதைஅப்படிச் செய்வோம்; ஆனால் பெண் பகுதியாரின் நோக்கமென்ன என்றதையும் நாம் அவர்களை உசாவவேண்டுந் தானே" என்று கணவன் சொல்ல, மனையாள் "அவர்களை உசாவவேண்டியதில்லையென்று நினைக்கிறேன்; எங்களுக்கு எது விருப்பமோ, எப்படிச் செய்வது வசதியோ, அந்த விருப்பத்திற்கும் வசதிக்குந் தக்கபடி நடப்பதற்கு அவர்கள் எந்தநேரமும் சித்தமாயிருக்கிறார்கள்; மேலும் எங்கள நோக்கத்தைவிட வேறான நோக்கம் அவர்களுக்கு ஏதுமில்லை; அவர்கள் அந்தப்பெண் எங்களுக்குரிய பெண்ணென்று முந்தியே தீர்மானித்து பண்ணிக் கொண்டார்கள்; அல்லாமலும், பாருங்கள், பெண் வீட்டுக் கருமங்களையும் நாங்களே பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்; இன்றைக்கே நாங்கள் போய்ப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தாலும் அவர்களுக்கு

உடன்பாடுதான்; ஆனால் அப்படிச் செய்வது அவர்களுக்கும் மதிப்பல்ல எங்களுக்கும்பெருமையல்ல" என்று இதமாகச் சொன்னாள்; "நான் கேட்பதும் யோசிப்பதும் வேறொன்றற்குமல்ல,எங்கள் பிள்ளைக்கு இடையில் ஒரு கண்டமிருக்கிறதென்று சோதிடர் சொன்னாரமே; அதைபிட்டுப் பெண்பகுதியார் ஏதும் யோசிக்கக் கூடுமோ என்றதைபிட்டுத்தான் பயப்படுகிறேன்" என்றார் முருகேசபிள்ளை; "அப்படியான கவலையொன்றும் அவர்களிடத்திலில்லை; அந்தப் பெண்ணே எங்கள் பிள்ளையைத் தன் கணவனாக நிச்சயித்துக்கொண்டு எங்கள் பிள்ளைக்கு அப்படிப் பட்ட பொல்லாங்கு ஏதும் வாராதபடி சதா தெய்வத்தை வேண்டுகின்றாள்; விரதமிருக்கிறாள்; கடவுள் கிருபையால் ஒருபொல்லாங்கும் வரமாட்டாதென்பது அந்தப்பிள்ளை கொண்ட திடமான நம்பிக்கை; அப்படியொன்றும் வரமாட்டாதென்றுதான் நாங்களும் நினைத்துக்கொள்ளவேண்டும்" என்று பயபக்தியோடு சொன்னாள் சண்பகத்தம்மாள். "சரி, அப்படியானால் எனக்கு மகா சந்தோஷம்; என்றாலும் நினைத்தவுடனே விவாகம் நிறைவேற்றி வைப்பதென்றால் முடியாது; எங்களுக்குள்ள ஒரேயொரு ஆண்பிள்ளையானதனால் இந்த விவாகத்தைச் சீராய்ச் சிறப்பாய் ஒருவகையான உலோபமுமில்லாமற் செய்துவைக்க வேண்டும்; அதற்காகிய ஆயத்தங்கள் முயற்சிகளெல்லாஞ் செய்யவேண்டும்; இந்த ஒரு மாசமுங்கழிந்துப் பின் எந்தநேரமும் கல்யாணம்நடத்த நான் ஆயத்தந்தான்;ஏதோ,கடவுள்எங்களுக்கு எவ்வகையான குறையும் வரவிடமாட்டார்" என்று சொல்லி முடித்தார் முருகேசபிள்ளை.

### "அடக்கம் அமரருள் உய்க்கும்"

இங்ஙனமாக, ஒருநாள் சொக்கலிங்கன் காஞ்சனமாலையைப் பார்த்து "தங்காய், என்ன, உன் புவன அக்காளிடத்தில் எல்லாச் சிறப்பும் விசேஷமு முண்டுதான்; ஆனால் ஆட்களோடுவாடும் விதம் முழுக் கருநாடகமாக விருக்கின்றதே" என்று புன்சிரிப்புடன் சொன்னான். தமயன் சொன்ன இந்தச் சொல்லு தங்கைக்குப் பிடிக்கவில்லை; வேறு யாரும் புவனத்தைப்பற்றி அப்படியான குறிப்பைக் கூறியிருந்தால் அவள் சொன்னவரைக் கடிந்திருப்பாள்; தன் தமையன் விஷயத்தில எதிர்த்தேனும் சினந்தேனும்பேசுவது முறையல்லவென்பதை அறிந்தவளாதலினால், காஞ்சனம் அகம் வருந்த மிக்க ஆறுதலோடு தமையனைப் பார்த்து, "ஏன் அண்ணா அப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று வினவினாள். "வேறொன்றுமல்ல, தங்கைச்சி, அந்தப்பெண் அன்று அங்கு வந்தபோது, ஒதுங்கிப் பதுங்கி நாணிக் கோணி நடுங்கி வெருண்டு உடல் வியர்வையுமுள்ளபடி, நிலத்தைப் பார்த்தபடி வந்து வடாடியதைபிட்டுத்தான், அம்மா, உனக்குச் சொன்னேன்" என்று வேடிக்கையாகச் சொன்னான் தமையன். "அண்ணா நாணம மடம அச்சம் முதலிய குணங்களுக்குக் கட்டுப்பட்ட உத்தம கன்னியர் அப்படித்தானே அண்ணா, நடாடுவார்கள்; அதை, விட்டு, தங்கள இடுப்பில இரண்டு கையையும் வைத்தபடி தலைநிமிர்த்த

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# இயற்கை விநோதம்

திருமயிலை, திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

நாமெல்லாம் எமது தொழில்களை இனிது நடாத்துதற்குப் பேருபகாரமாயுள்ள உயர்வொப்பில்லாப் பெருஞ் சிறப்பமைந்த இரண்டு கைகளும் கால்களும் அளிக்கப்பட்டிருத்தலும் இந்த உறுப்புகள் தத்தமது தொழிலை இனிது நடாத்துதற்கியைந்தவாறு சமஅளவினவாய் ஆக்கப்பட்டுச் சமதானங்களிலே நிறுத்தப்பட்டிருத்தலும் இவற்றிலேயே தொழில் செய்தற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய விரல்கள் இயைக்கப்பட்டுக் கிடத்தலும், இவ்விரல்கள் தொழில் செய்வதற்கு ஏற்றவாறு மற்றை அங்கங்களினும் மிக அதிகமாகிய பொருத்துகளைக் கொண்டிருத்தலும், இப்பொருத்துகளிற் சந்திக்கும் இரண்டு எலும்புகளும் ஒன்றோடொன்று செவ்விதிற் பொருந்துமாறு (சிற்பன் மரங்களைப் பொருந்துமாறு வெட்டிச் சீர்ப்படுத்தலன்ன) இயைபுள ஆக்கி அமைக்கப்பட்டிருத்தலும், இந்தச் சிற்றங்கங்கள் தாமும் விரிந்தும் சுருங்கியும் இயங்குமாறு நுண்ணிய நாடிபந்தனஞ் செய்யப்பட்டிருத்தலும் இந்நாடிகளுட்பல எமது அறிவின்றியும் தூக்கம் முதலிய வேளைகளிற்றானும் தாமே இயங்கி எமது சீவனுக்குப் பாதுகாப்பாயிருத்தலும் வியக்கத்தக்கனவாம்.

இனி நாம் உட்கொள்ளும் உணவுகளை அரைத்துப் பொடிபடுத்தற் பொருட்டு அதற்கியைந்த வன்மை படைத்த பல்வரிசைகள் அமைக்கப்பட்டிருத்தலும், இப் பல்வரிசைகள் மற்றை அகங்களைப்போலாது அடைத்தற்றொழிற்குரிய வடிவமும் வன்மையும் படைத்துக் கிடத்தலும் இவற்றுள் உணவுகளைத் துண்டங்களாக்குதற்கியைந்த பற்கள் ஒருபுறமாகவும், அத்துண்டங்களைப் பின்னர்ப் பொடிபடுத்தற்கியன்ற பற்கள் ஒருபுறமாகவும், நிரைகப்பட்டிருத்தலும், இந்தப் பற்கள் நாமெலாம் வன்னெறி படைத்த உணவுகளை உண்டற்குரிய வயதை எய்தியபின்னே நமபாற்றோன்றுதலும் இப்பற்களால் அரையுண்டு பொடிபடும் உணவுகளைக் குழைத்துப் பாகஞ் செய்தற்கமைந்த உமிழ்நீர் நமது வாயிலே அமைக்கப்பட்டுள்ளமையும், இவ்வுமிழ்நீரிலே நமது ஆரோக்கியத்திற்குப் பெரிதும் வேண்டப்படும் சத்தமைந்து கிடத்தலும், இதனால் குழைந்து அரையுண்ட உணவை உள்ளே செலுத்தற்கமைந்தோர் குழல்வாயின்கண் இயைக்கப்பட்டுள்ளமையும் போதிசயம் பயப்பனவாம்.

இந்தக்குழல் உணவுகளை ஏற்றுப் பரிபாகஞ் செய்யவல்ல இரைப்பையோடிணைக்கப்பட்டுக்கிடத்தலும், இவ்விரைப்பை அவ்வவர் தேகத்துக்கு ஏற்றத்தக்க அந்துணைப் பிரமாணங் கொண்டு கிடத்தலும் அங்கே நாம் உண்ணும் உணவுகளைப் பிரித்துச் சத்துகளை வேருக்குமோர் பேதிய ஆற்றல்படைத்த பாசகநீர் பாசகநீர் உண்மையும், இப்பாசகநீரால் பிரிவுற்ற சத்து அன்னப்பாகாய்த் திரிந்து குடலுட்புகுதலும் இப்படிப் புகும்போது அவ்வன்னப்பாகு பித்தாசயத்திலுள்ள பித்தத்தின் வழியால் அன்னரசமாய்த் திரிந்து, பின்னர்ச் சிற்று சிறிதாக இரத்த வடிவெடுத்து நரம்பு வழியாக உதிரசிரத்துட் செல்லுதலும அன்னப்பாகு இப்படிச் செல்ல சமீகரணமுறையாற் கழிவுற்ற அகத்தங்களெல்லாம பிற்றோர் வழியாற் பிறிதோர் குடருட் சேரமந்தவறுதபுக்கு மல நீராதிகளாகமாறி வெளியே கழிதலும் இவற்றையெல்லாம் இந்த முறைதவறாது ஆங்காங்கே கொண்டுசெலுத்த வல்ல வாயு ஆதி முதலேனைத்தக்க அளவைப்படி அமைந்துள்ளமையும், இனி முன்னர்உதிரசிரத்துட்சென்ற இரத்தம் ஒன்றன்பின் ஒன்றாய் நால்வகை ஆயசங்களுட் சென்றபடி முறையே பூரணசுத்தி அடைந்து உதிர அணுக்களின் துணையால் நரம்புகள் வழியாக உடம்பெங்கணுஞ் செல்லுதலும், இவ்விரத்தத்தால் தசைக்கு மாத்திரத்தினமையாது என்பு, நரம்பு, மயிர், மூளை, நகம் முதலிய அனைத்துறுப்புகட்கும் அதததற்கியைந்தபடி ஆகாரஞ் செலுத்தலும், ஆயசத்தினின்று இரத்தத்தை உடம்பெங்கணும் கொண்டு செலுத்தும் உதிர அணுக்கள் அங்ஙனம் செலுத்துகையினால் அழுக்கடைந்து பின்னர்ப் பிறிதோர் நரம்பு வாயிலாற் பின்னும் உதிராசிரத்துட்புக்குச் சுத்தியடைந்து மீட்டும் தமது தொழிலை ஓயாது செய்துகொண்டிருத்தலும இவ்வாறே நாம் உட்கொள்ளும் உணவுகள் நமக்கியைந்த தசையாதிகளாக உருத்திரியும் திறனும் எடுத்தியம்புதற் கரியனவாம்.

இனி நமது உடம்பின்கணுள்ள மற்றெந்த உறுப்பினும் மகாமுக்கியம்படைத்துத் தமக்கோர் அபாயம் நேரினும் முழுதுடம்பும் பாழ்பட்டழிந்துவிடத்தக்க அத்துணைப் பெருவிசேடங்கொண்டு கிடக்கும் மூளையும் இரத்தாசயமும் பிற அங்கங்களைப்போலாது மிகப்பலங்கொண்ட இரண்டு என்புக் கூடுகள் அமைந்து தீங்கு நேரிடாவாறு பாதுகாக்கப்பட்டுக் கிடத்தலும், ஆவ்வியல்பிற்றாய் அதிநூதன தேகத்தைக்கொண்ட தோற்றங்கள் ஒன்றினிருந்து ஒன்று உற்பத்தியாகப் பெருகும் அப்பெருவிநோதமும், அவ்வாறுபெருகுதல் பொருட்டு இனைபல பேராச்சரியப் பெருநூதனங்களையெல்லாம் சூக்குமித்துக் கருவாக்கி அவ்வவற்றின்கண் அமைத்திருக்குமுறையும், அக்கருக்கள் கருப்பாசயத்திற் படிந்தபின் எய்தும் விநோதத் திரிபுகளும் அத்திரிபுகளின்கண் நிகழும் ஒழுங்குகளும் அவ்வொழுங்குகளால் எய்தும் பிரயோசனங்களும் இப்படிக் கருவாய குழவிகட்கு அவ்வக்காலத்தே அவ்வக் காலத்திற் கேற்றபடி உணவுசென்று போஷிக்கும் பேராச்சரியமாடும், ஆவ்வாறு கருவிகளினின்று உற்பத்தியாகும் ஒவ்வொரு தோற்றத்தினும் மேல்விரித்துக் காட்டிய அத்தியந்த நிலையமைந்த கிரமப்பிரயோசன விநோதங்களாவும் சிற்றும் பிறழாது அமையுமியற்றும் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் கடவுளின் பெருங்கருணையைத் தெரிவிப்பன.

—தொடரும்

## தேகவியோகம்

திரு. பொன்னம்பலம்-கார்த்திகேசு

தாவடியைச் சென்னவூராகக் கொண்டவரும் தாவடி வழக்கறிஞர் திரு. P. K. சோமசுந்தரமவர்களின் தந்தையாருமாகிய திரு. பொன்னம்பலம் கார்த்திகேசு அவர்கள் சென்ற 29-9-43 இலன்று தமது வாசஸ்தானத்தில் தேகவியோகமாயினர் என்னும் துக்கச் செய்தியைத் தெரிவிக்கவேண்டியவர்களாகின்றோம். இவரது புத்திரர் ஏனைய சுற்றமித்திரர் ஆதியோர்க்கு எம் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# ஈழநாடும் அதன் பண்டைத் தலைநகரங்களும்

## 2 பொலநறுவை எனப்படும் புலஸ்தியநகரம்

(கொழும்பு கோட்டாஞ்சேனை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி)

நம்மவருட் பெரும் பாலோருக்கு ஆயிரக் கணக்கான மைலுக்கப்பாற் கிடக்கும் அந்நியநாடுகளிலுள்ள மூலை முடுக்குகளின் சரிதமெல்லாம் நன்றாய்த் தெரியும்; ஆனால் எங்கள் நாட்டுச் சரிதமெனிலோ நம்மவர்களுக்குச் சுத்த சூனியம். நம்மவருள் எத்தனை பேர் இந்நாட்டுப் புராதன நகரங்களையும், சரித்திரப் பிரசித்தி வாய்ந்த தலங்களையும் தரிசித்திருக்கின்றனர்? சிலரினும் சிலரே யெனலாம். இப்பொழுது இந்தப் பொலநறுவை நகரையாயினும் சற்றே தரிசித்துப் பார்ப்போம். அங்குள்ள கலைச் செல்வத்தை நேரிற் போய்க் காணுவோம்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர்—தற்பொழுதுள்ள இரும்புப் பாதை யோடப்பட முன்னர்' பொதுஜனங்கள் வடக்கே சிங்கை நகர் (பருத்தித்துறைக்கு அணித்தாக உள்ளது) தொடக்கம் தென் கிழக்கே மாத்தளை ஊடாக மகாதுவரை வரையும் தெருவீதியால் கால்நடையாய் ஆவது, மாட்டு வண்டி, பல்லக்கு முதலியன கொண்டு செல்வர். அக்காலத்து மக்கள் பௌத்தவிகாரைகளையும் தாதுகர்ப்பங்களையும் பொலிந்துள்ள பொலநறுவைக்குச் செல்லும்பொழுது, பல அட்டைகளாலும், விஷ ஜெந்துக்களாலும் தாக்கப்பட்டிருப்பர். அத்துடன் கள்ளர்பயம் இருந்தது. தமது சமயத்தில் வைத்திருந்த பக்தியால் இவையொன்றையும் அக்காலத்துப் பொதுச்சனங்கள் பொருட்படுத்தவில்லை. இக்காலத்தில் இங்கு செல்வதற்கு புகைரத மார்க்கமாகச் செல்லக்கூடியவிவு வசதி உண்டு. பஸ் மார்க்கமாகவும் இவ்விடத்துக்குச் செல்லலாம். இன்றும் வெசாக் (வைசாகத் திருநாள்) ஆனிப் பௌர்ணிமை (பொசன்) முதலிய விழாக் காலங்களில் பல பாகங்களிலிருந்து பஸ்வண்டி, புகைரதவண்டி, மோட்டர்வண்டி மார்க்கமாக ஏராளமான சனங்கள் இப் பண்டைத் தலைநகரத்தைப் பார்க்கச் செல்லுகின்றனர்.

கொழும்பில் இருந்து காங்கேசந்துறைக்குச்செல்லும் முக்கிய இருப்புப்பாதையில் மாகோ ஜங்ஷன் இருக்கிறது. மாகோ ஜங்ஷனிலிருந்து கல ஓயா வழியாக ஒரு கிளை இருப்புப்பாதை திருக்கோணமலைக்கு ஓடுகின்றது. மற்றொன்று மட்டக்களப்புக்குச் செல்லுகின்றது. கல ஓயாவிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும் வழியில் தோப்பவாவிக்கு அணித்தாக பொலநறுவை இருக்கிறது. ஒரு பள்ளிக்கூட விடுமுறையன்று கொழும்பிலிருந்து மாலை வண்டியில், ஒரு கோஷ்டியினர் புறப்படுவோமானால் அடுத்தநாட்காலை பொல பொல வென்று விடியுமுன்னரே பொலநறுவைப் புகைரத ஸ்தானத்தை அடைந்துவிடுவோம்.

புகைரத வண்டி ஸ்தானத்தை அடைந்துவிட்டது. முக்கிய தெருவீதிக்கு ஊடாகச் சென்று சூழலைப் பார்க்கவும். இருமருங்கும் பசுமைப் பசேலென செந்நெற் கழனிகள்! பயறு, கொள்ளு, எள்ளு, கம்பு முதலிய புன்செய வயல்கள், கண்ணுக்கு அளிக்கும் இனிய காட்சி! இவையெல்லாம் யுத்த நெருக்கடியால் விளைந்த நற்பயன்! தோப்ப வாவிக்கு அணித்தாக உள்ள கிலம் கிலேசிலமாக மாறியது மிகச் சமீபத்திற்றான். அங்கு பலபாகங்களில் இருந்து குடியேறியிருக்கும் குடிகள் சென்ற நான்கு வருடங்களுக்குள் வந்த குடிசனங்களே ஆவர். புகைரத ஸ்தானத்திலிருந்து தபால்கந்தோர் வரையும் சுமார் இரண்டு மைல்கள் இருக்கும்.

தபால்கந்தோரடியில் தங்கி, அங்குள்ள வழிகாட்டி ஒருவனை அழைத்துக்கொண்டு பழமைச் சின்னங்களை ஆராயப் புறப்படுவோம். சிறிதுதூரத்துக்கு அப்பால் இடிந்த புறச்சுவரின் அழிவுகளை நாம் காணுகிறோம். இதுதான் பழைய பொலநறுவையின் வெளிமதிலின் அழிவு. எமகள் கண்முன்னே தூரத்தில், தூங்கிக் கொண்டிருக்கும் செங்கற் கட்டடம் ஒன்று கிடக்கிறது. அது என்ன? அதுதான் பராக்கிரமவாகு மன்னனின் குளிர்கால மாளிகையின் அழிவு. அது கட்டப்பட்டு சுமார் தொளாயிரம் ஆண்டுகள் சென்றுவிட்டன. ஒரு காலத்தில் அது ஏழு அடுக்கு உப்பரிகையாகத் திகழ்ந்திருந்தது. ஆயிரம் அறைகள் இருந்தன; பன்னூற்றுக்கணக்கான தூண்கள் உள்ளன. அங்குள்ள கதவுகள், யன்னல்கள், மணிகள் எல்லாம் செழும் பசும்பொன்னால் அமைக்கப்பட்டன. மன்னனுடைய படுக்கை அறையில் பொன் விளக்குகளும் எரிந்தன. மஞ்சத்தை முத்து மாலைகள் அலங்கரித்தன; மலர்கள் சுகந்த வாசத்தை எங்கும் வீசின. இவ்வளவும் கட்டுக்கதையல்ல; மகாவம்சத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. முக்கால்வாசி உண்மையாய் இருக்கலாம்.

இந்தக் கட்டடத்துக்குப் பக்கத்தே ஒரு செய்கைத் தடாகம். அது இன்னும் பழுதுறாமல்தான் இருக்கிறது; சதுர வடிவானது இது; வாயில்கள் இரண்டு. அக் கேணியில் உள்ள சலதாரைகள் சித்திரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை இரண்டு: முயல்களின் தலையைப்போல இருக்கின்றன. மத்தியில் ஒரு வட்டக்கல். மன்னனும் குடும்பத்தாரும்—வசதியாக இருந்து எண்ணெய் முழுக்குச் செய்வதற்கு. இக்கல்லுக்குமேல்—மூன்று சிங்கங்கள். உயிர் உள்ளனவோ என்று ஐயுறக்கூடியளவு அழகான சித்திரவேலை! இங்கு பொலநறுவையிலிருந்து ஆட்சி செய்த இராச குடும்பத்தார் நீராடினர். இச் செய்கைத் தடாகம் "குமார பொக்குண" என வழங்கப்படுகிறது.

### நிசங்க மன்னன் சபா மண்டபம்

இராச மாளிகையின் அழிவுக்கு நூறு யாருக்கு அப்பால் நாம் செல்வோம். அங்கு பல சித்திரங்கள் செதுக்கப்பட்ட தூண்கள், யானைகள், அன்னங்கள், இடபங்கள் முதலியன அமைக்கப்பட்டுள்ள சந்திர வட்டக் கற்களும், அழகாக அமைக்கப்பட்டுள்ள துவார பாலகர்களும் கண்களுக்குக் கலை விருந்து அளிக்கின்றன. இக்கொலு மண்டபத்தின் நடுவில் ஒரு சிங்காசனம் இருந்தது. இது கி பி 1192ம் ஆண்டு தொடக்கம் கி பி 1201 ஆண்டு வரையும் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ நிசங்க மன்னனால் அமைக்கப்பட்டது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்

## ஈழநாடும் அதன் பண்டைத்தலைநகரங்களும்

3-ம் பக்கத் தொடர்ச்சி

இச்சிங்காசனத்தைத் தாங்கிநின்ற கற்சிங்கம் இலங்கை நூதன சாலையில் இன்றும் காணலாம். கற் சிங்கத்தை அமைத்த சிற்பியை நாம் புகழாமல் இருக்க முடியாது.

அக்காலத்துக் கொலு மண்டபம் எவ்வாறு நடைபெற்றது? அக்காட்சியை நாம் அகக் கண்களால் படம் பிடிப்போம். மன்னன் நடுநாயகம் வகித்திருந்தான். வலது பக்கத்தே பட்டத்து இராசகுமாரன், மற்றைய இராசகுமாரர்கள், பிரதம சேனாதிபதி, அதிகாரங்கள் ஒவ்வொருவரின் தகுதியின் பிரகாரம் அடுத்தடுத்து வீற்றிருந்தனர். இடது பக்கத்தே மாகாண அதிபர்களும், வெவ்வேறு பகுதித் தலைவர்களும் வீற்றிருந்தனர். அங்குள்ள சாசனங்கள் தெரிவிக்கின்றன இதை.

"நிசங்க—லட—மண்டம்" என்று கூறப்படும் இடத்தின் அழிவுகள்—ஒடிந்த தாமரைபோன்ற கற்றூண்கள் முதலியவற்றைத் திருத்தி அமைத்திருக்கும் வேலை இலங்கை அரசாங்கத்தாரால் — புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### தந்த மாளிகை

இதற்குச் சிறிது வடக்கே மிக முக்கியமாயிருந்த பண்டைக் கோவில் இருக்கிறது. இதைப் பார்க்க இந்துக்கோவில் மாதிரி இருக்கிறது. அங்குள்ள சிலைகள் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே மூலஸ்தானத்தில் ஓர் கோமுகை—இலிங்கத்தின் ஒருபகுதி—வலது மூலையில் இருக்கிறது. தந்தம் வைக்கப்பட்ட பீடத்துக்குமேலே எட்டு மூலைப்பட்ட கூரை இருந்தது என அறியக்கிடக்கின்றது. அந்த மாளிகைத் தூண்களின் அடிகள் சதுர வடிவமாக இருக்கின்றன, நாகங்களின் தலைகள் அத் தூண்களில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன! இந்துக் கோவில்கள்பல, அப்புறம் பௌத்த கோவில்களாக மாறியிருக்கின்றன. அவற்றுள் இதுவும் ஒன்றாய் இருந்தால் என்ன? நாகங்களின் தலைகள் தமிழர்களால், தமிழ்ச் சிற்பிகளால் வெகு திடிப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கு வட கிழக்கே சதுரவடிவமான செங்கல்லினால் அமைக்கப்பட்ட தூபரும என்னும் பௌத்த கோவில் இருக்கிறது. இதைச்சுற்றி சுவர்கள் ஓடுகின்றன. அச்சுவர்கள் ஐந்து அடி அகலமுள்ளன. அச்சுவர்களில் சில அழகான சித்திரங்கள்-சிங்கங்கள் ஆட்கள்-சேற்றைக்கு அமைக்கப்பட்டனபோல அழகாகக் காணப்படுகின்றன. உள்மண்டபம் வில்லுப்போல அமைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள புத்தபிரானின் சிலைகள் பண்டைக்காலத்துக் கலைப் பெருமைக்கு அத்தாட்சி பகர்கின்றன.

தூபருமாவுக்குக் கிழக்கே "வட்டடாகை"யின் அழிவுகள் இருக்கின்றன. மாபெரும் பௌத்த ஆலயம் இது. தனிச்சிறப்பு வாய்ந்தது. தாதுகர்ப்பத்தைச் சுற்றிக் கட்டப்பட்டது இக்கட்டடம். மகாபராக்கிரமவாகு மன்னன் கட்டிய முதன்மையான கோயில். உரோமபுரியிலுள்ள கொலீசியத்தை யொத்த அழகுள்ளது இது. இருபெரும் வெளிச் சாலைகள் இதில் உள்ளன. இது நீள்-வட்ட வடிவமாக அமைந்துள்ளது. இது கட்டப்பட்ட நாள் தொடக்கம் இன்று வரையும் ஆயிரக்கணக்கான பௌத்தர்கள் இப் போதசயமான கோவிலுக்குத் தரிசனம் செய்து போகின்றனர். இக்கோவிற் தெற்கிலேயுள்ள சுவரில் சுதைச் சேர்வையால சில அழகான சித்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நடனக்காட்சி, மேளம் அடிப்பவர்கள் முதலிய சித்திரங்கள், அக்காலத்திலே நாட்டியக்கலை படைத்துள்ள உயர்ந்த நிலையை எடுத்து விளக்குகிறது. கண்களால் பார்த்து அனுபவிக்க வேண்டிய சித்திரம் இவை. கிழக்குத் திசையில் யன்னலைச் சுற்றி பல கற்சித்திரங்கள் காட்சி அளிக்கின்றன. அன்னங்கள், யானைகள், சிங்கங்கள், குதிரைகள், இடபங்கள் முதலியன. இவைகள் இக்காலத்துச் சித்திரநிபுணர்களைப் பிரமிக்கச் செய்யும் சிறப்பு வாய்ந்தன. 1942ம் ஆண்டு டிசெம்பர் மாசம் 25ந் திகதி தொடக்கம் இவ்வாண்டு தொடங்கி மூன்று நாள் வரைக்கும் கொழும்பு நகர மண்டபத்துக்கு அணித்தே அமைக்கப்பட்டுள்ள "இலங்கை உணவுப் பொருட்காட்சி"யின் கட்டட அமைப்பு "வட்ட-டாகையின்" அமைப்பை ஒத்தே அமைக்கப்பட்டிருந்தது.

வட்ட-டாகையின் கிழக்கே 'ஹட்ட—டாகை' எனப்படும் கட்டடம் உண்டு. இங்கு அறுபது பௌத்த சின்னங்கள் அடக்கப்பட்டிருந்த படியால் அப்பெயர் பெற்றது என்ப.

### கற்புத்தகம்

ஹட்ட டாகையின் வலதுபக்கத்தில் பனை ஓலை ஏட்டைப் போன்ற கற்சிலை உண்டு. இது இருபத்தெட்டடி நீளமும் ஐந்து அடி அகலமும், இரண்டரை அடி தடிப்பும் உள்ளது. இதன் நிறை இருபத்தைந்து தொன் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இக் கல்லின் மேல் குறிக்கப்பட்ட வசனங்கள் கீர்த்தி நிசங்க மன்னனைக் குறிப்பிடுவன: அவை இவை:

நிசங்க மன்னன் ஒருமுறை பாலைவனத்துக்கு ஊடாகச் செல்லும் பொழுது மழையை விரும்பினான் என்றும்; மழை உடனே தாம் எதிர்பாராத மேகத்தினின்றும் பொழிந்த தென்றும் பட்டத்து யானை இம் மன்னனைக் கண்டவுடனே பிளிறி அவனைத் தனது முதுகில் வைத்துக்கொண்டு சென்றதென்றும், ஆண்டுதோறும் மன்னன் சர்வ இராச-அலங்காரத்துடனும் பட்டத்துத் தேவியும் தமது மகன், மகள் சூழ இராச-குடும்பத்தினர் ஒவ்வொருவரின் நிறை எடுக்கப்பட்டது என்றும், அவர்களின் நிறைக்கு ஐந்து மடங்கு சமானமுள்ள பொருள்களை பிக்கு மாருக்கும பிராமணர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் இலவசமாகக் கொடுத்து அவர்கள் அனைவரையும் மகிழ்வித்து மழை பொழிவித்தான என்றும இக்கல் நிசங்க மன்னனின் நட்சத்திர சாதகங்கள் சிலரின் உதவியால ஐம்பது மைலுக்கப்பால் உள்ள மிகிந்தலை மலையிலிருந்துகொண்டு வந்து தாபிக்கப்பட்ட தென்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. கற்சாசனத்தைச் சுற்றி வரச் சித்திர சோடனையாக, இருமருங்கும், யானைகள், அன்னங்கள முதலியன செருக்கப்பட்டிருக்கும் கற்சிலைகள், காலுக்கு மேல் கால போட்டு-அஷ்டாங்க பாவனை பிலயோகம் செய்யும் பாவனையுள்ள புத்தபிரானின் சிலையும் காணப்படுகிறது. கண்ணால் பார்த்து அனுபவிக்கிற சித்திரக்கலை நிறைந்துள்ளன இவையன்றோ? அன்றோ?

இந்தக் கற்புத்தகத்துக்குப் பின்னால் சதமஹால் பிரசாதம் என்னும் ஏழு அடுக்கு மாளிகையின் அழிவைக் காணலாம். அந்த மாளிகையில் ஒவ்வொரு அடுக்கிலும் புத்தபிரானின் சிலைகள் இருக்கின்றன. கிழக்குத் திசையில் அக் கட்டடத்துக்கு மேலே செல்லுவதற்கு அமைக்கப்பட்ட படிக் கட்டுகளின் அழிவு இருக்கிறது. இதன் அத்திவாரம 28½ அடி நீளமும் 28½ அடி அகலமும் உடையது. இது என்ன காரணத்திற்காகக் கட்டப்பட்டது? கால அரக்கன் இதனை வலுவாகத் தாக்கியிருக்கின்றான்.

இதன் மேற்கே பிரசங்க மண்டபத்தின் அழிவுகள் கிடக்கின்றன. இம் மண்டபம் 32 அடி நீளமும் 27 அடி அகலமும் உள்ளது. பல கற் சாசனங்கள் உள்ள தூண்கள் அச்சாலையில் காணப்படுகின்றன. அது சாஞ்சியில் உள்ள தூபத்தை ஒத்திருக்கிறது.

இந்த ஏழு அடுக்கு மாளிகைக்கு வடகிழக்கே காட்டை நோக்கி ஒரு வழி ஓடுகிறது. இவ்வழியால் நூறு யாருக்கு அப்பால் ஒரு பெரிய ஸ்தூபியின் அழிவு கிடக்கிறது.

### போலநறுவையிற் காணப்படும் இந்துக் கோவில்கள்

இதற்குச் சிறிது அப்பால் ஓர் அழகான சிவன் கோவில் இருக்கிறது. அது கருங்கல்லால் மழை, காற்று, வெய்யில் முதலியவற்றினால் பாதிக்கப்படாமல் இருக்கக் கூடிய கோபுரம் உடையதாய் 12ம் நூற்றாண்டுக்கும் 14ம் நூற்றாண்டுக்கும இடையில் தமிழ் ஸ்தபதிகளால் கட்டப்பட்டது. மூலஸ்தானத்தில் இருக்கும சிவலிங்கமும் நந்தியும் மனக் கண்களை ஈர்க்கின்றன. இது பாண்டிய நாட்டுச் சிவன் கோவிலைப் போல அமைக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்துத் தமிழ்க் கற் தச்சர்கள் அருமையாகத்தான் அமைத்திருக்கின்றனர். இன்னும் சிறிது தூரம் காட்டு வழியால் சென்றால் இன்னொரு சிவன் கோவிலைக் காணலாம். (இல 2) (இது 10ம் நூற்றாண்டுக்கும் 11ம் நூற்றாண்டுக்கும இடையில்) சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழ மன்னர்களால கட்டப்பட்டது. இது கருங்கற் பணி. இலங்கை அரசாங்கத்தாரால் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதனைப் பார்த்துக் கண்ணீர் சொட்டவேண்டும் உண்மையான சமய சாதி அபிமானங்கொண்ட தமிழன்.

இக்கோவில்களில் இருந்த தாமிரச் சிலைகள் இலங்கை நூதனப் பொருட்சாலையில் (அது தறபொழுது பெல்மதுலையில இருக்கிறது) வைக்கப்பட்டிருக்கிறது. கோபநிலை, தவநிலை, புன்சிரிப்பு, ஆகிய பாவங்களைத் தத்ரூபமாக விளக்கிக் காட்டுகின்றன இச் சிலைகள். இவற்றைச் செய்த சிற்பிகள தமிழர் என்று நாம் பெருமிதம் கொள்ளலாம். உமா-மகேஸ்வரர் தாண்டவமாடும நடராசர், சிவகாமி அம்மன், ஆலிங்கன மூர்த்தி, காளி, சண்டேசுவரர், சூரியன், இடபாரூடர், அஷ்டதிக்குப பாலகர்கள அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கர் முதலிய சமயகுரவர்கள, சிலைகள பதினாறு ஆபரணங்களுடனும பதினாறு முத்திரைகளுடனும், தாலம முதலிய இலட்சணங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆலிங்கன மூர்த்தி சிவபெருமான் பார்வதி அம்மனைத் தழுவும பாவனையில அழகாகப் பழைய தமிழ் ஸ்தபதி ஸ்தபதிகளால் செய்யப்பட்டிருக்கிறது!

லமாகக் கிடக்கும் இந்தச்சிவன் கோவில்களுக்குக் கிழக்கே காட்டுப் பாதையாக கால்மைல செல்வோம. தன்னந்தனியே ஓர் விஷ்ணு தேவாலயம் இருக்கிறது. கண்டித் தந்த மாளிகையை ஒத்த கட்டுமூலைக் கோபுரம இதற்கு உண்டு. இதன் தெற்குச் சுவரில் ஒரு நீண்ட சாசனம் இருக்கிறது. அச் சாசனம ஆயிரம் உண்மைதான—தமிழில எழுதப்பட்டிருக்கிறது. சுவர்களில ஆயிரம் வருடங்கட்கு முன் தீட்டப்பட்ட சித்திரங்கள். பழமைகால சித்திரம. மழை வெயிலில அடிபட்டும், முற்றும் மறையாமல் கண்ணால பார்த்து அனுபவிக்கக் கூடிய இந்து மதத்தைச் சார்ந்த தெய்வங்கள வரிசையாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

(வரும)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

**வெள்ளி ஒக் 8**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 சந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஜி வி இராமச்சந்திரன் பாட்டு 9 முடிவு.

1கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சே என் செல்லப்பா பாய் பாட்டு 2 தமிழ் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 தூரன்-ஷரீப் 6 ஜி வி ராமசந்திரன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பழமொழி நாடகம் 8 குளிக்கரை எஸ். பிச்சையப்பா நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 படப்பாட்டுகள் † 10-30 முடிவு.

**சனி ஒக் 9**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 சுந்தா ஓதுவா மூர்த்திகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எஸ் வெங்கடாசலம் பிள்ளை வயலின் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 நாடக நினைவுகள் † 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ். வெங்கடாசலம் பிள்ளை வயலின் 2-30 முடிவு.

மாலை 5 கல்பகம் நாராயணன் பாட்டு 5-40 ராமலிங்க சுவாமிகளின் ஜீவ சாக்ஷிமாலை 6 டாக்கி இசை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 பக்கபலங்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9-15 டாக்டர் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகமாலிகை † 10 பராசக்தி 10-30 முடிவு.

**ஞாயிறு ஒக் 10**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சாரதா அனந்தராமன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம் 2-30 முடிவு.

மாலை 5 தேவகோட்டை நாராயண ஐயங்கார் வீணை 5-40 தேவாராதனை 6 சாரதா அனந்தராமன பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புத்தக விமர்சனம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தேவகோட்டை நாராயண ஐயங்கார் 8-30 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தில்ருபா 10 இசைவேளை † 10-30 முடிவு.

**திங்கள் ஒக் 11**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில செய்திகள் 8 நந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ வெங்கடராமன் நாகஸ்வரம 9 முடிவு.

1 கதம்பம் †1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி வி கணேசய்யர் ராமய்யர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 என் வெங்கடராமன் நாகஸ்வரம 5-45 இசைப்பயிற்சி 6 பி வி கணேசய்யர் ராமய்யர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள 7-45 மஸ்கிட்டோ விமானம் 8 தஞ்சாவூர் பி நாராயணசாமி பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 குருவிணைகள 10 சினிமா பாட்டுகள் † 10-30 முடிவு.

## உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படி ஆண்பிள்ளைகள் சமூகத்தில் வந்து அவர்களை எதிட்டுப்பார்த்துக் கொண்டு வார்த்தையாடுவார்களென்று எண்ணுகிறீர்கள்; அப்படி நடக்கும் பெண்களும் இந்தக்காலத்திலே உண்டுதான்; ஆனால் என் அக்காள் அப்படியாகப் பழகிக் கொள்ளவில்லை; பெண்களுக்கு அடக்கந்தானே இன்றியமையாத குணமென்று சொல்லுவார்கள்; ஒதுக்குவதும் பதுங்குவதும் அடங்குவதும் அறிவுடைமைக்கு அறிகுறியென்று சொல்லுவார்கள்;

"அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—
மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு"

எனவும், அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் எனவும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அடங்காப் பெண்டிர் கொண்டானுயிரைக் கவரும் கொடிய கூற்றுவனுவ ளென்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது" என்று ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்தினான் காஞ்சனம். சொக்கலிங்கன் தன் தங்கையின் புத்தி சாதுரியத்தையும் புவனத்தின் மீது அவள் கொண்டுள்ள அபிமானத்தையும் அறிந்து அகத்தே மகிழ்ச்சியுடையனாய், புறத்தே அம் மகிழ்ச்சியைக் காட்டாதவனாய், பின்னரும் அவளைப் பார்த்து "தங்காய், அடக்கம் முதலிய குணங்கள் பெண்களுக்கு வேண்டாமென்று நான் சொல்லவரவில்லை; எல்லாம் ஒரு அளவிற்கல்லவோ இருக்க வேண்டும்; இஸ்லாம் பெண்களைப் போல் முட்டாக்கிட்டுக் கொண்டு ஆண்பிள்ளை யென்ற பேரைக் கேட்டமாத்திரத்தே இல்லையேல், ஆண்வரல் அடவிசினவுடனே வீட்டுக்குள் ஓடிப்போய் மூலைமுடக்குகளிற் பதுங்கிக் கொள்ளுகிறதாகிய அந்தப் பழக்கம் உதவாதென்றல்லவோ சொல்லவந்தேன்; நாளைக்கு விவாகம் நிறைவேறிய பிறகு நான் இல்லாத நேரத்திலே நம்மைத்தேடி ஒரு நண்பர் வீட்டிற்கு வந்தாரென்று வைத்துக் கொள்ளுவோம்; அந்த நேரத்திலும் இந்தப் பழக்கம் இருந்தால் நடப்பதென்ன? நம்மிடத்தில் நாலுபேர் புருஷன் மனைவியாக வந்தால் நாமும் அவர்களை நன்றாய் உபசரிக்கவேண்டும். அவர்களுடைய வீட்டிற்கு நாங்கள் இருவரும் போகத்தான் வேண்டும்; ஒரு கூட்டத்திற்கு, கொண்டாட்டத்திற்கு, படக்காட்சிக்கு இரண்டு பேருமாகத்தான் போகவேண்டி வரும்; அப்படியான சமயங்களிலே காலத்திற்கேற்ற கோலம் என்றது இதமாகவல்லவோ, தங்கைச்சி, நடக்கப் பழகிக்கொள்ள வேணுமென்றதையிட்டுத்தான் சொல்லுகிறேன்; உன் அக்காமீது நான் வேறு ஒரு குறையுஞ் சொல்லவில்லை; தங்கைச்சி நீ இருக்கிறாய், அப்படியாகப் பதுங்க ஒதுங்கப் பயப்பட நான் பார்த்ததில்லை" என்று கூறினான். இவைகளைக் கேட்ட காஞ்சனம் புன்னகையோடு தமையனைப் பார்த்து "அண்ணா, உங்களிடம் வந்தபிறகு நீங்கள் விரும்பிய பழக்கங்களைப் பழகிக்கொள்ளலாம்; கணவனுக்கினியளாய் அவன் குறிப்பறிந்து நடப்பவளே உத்தம மனைவி யென்பர்; அது நடக்க, என்னைப்பற்றிச் சொன்னீர்கள்; எனனுடைய பழக்கங்களும் சுவாதீனமும் நல்லனவென்று நான் சொல்லத் துணியேன்; என்னிடத்தில் ஏதும் திருத்தமான நடையடைட்டமிருந்தால், அவைகளெல்லாம் எங்கள் சின்னம்மா ஆச்சியின் மக்களுடன் நான் கூடியாடியமையாற்றான் பயின்று கொண்டனவெனலாம்" என்று சொன்னாள். சொக்கலிங்கன் தன் தங்கையை அன்புடன் பார்த்து "தங்காய், நான் சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன்; அந்தப் பெண்ணிடத்தில் எவ்வகையான குறையுமில்லை" எனலும் "அப்படியானால் வெகு சந்தோஷம்" என்றாள் காஞ்சனம். (வரும்)

# தமிழ்ப் பேராசிரியருக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

## பல பாராட்டுச் சொற்பொழிவுகள்

சுவாமி விபுலானந்தா அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலைக்குப் பேராசிரியராக நியமனஞ் செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுமுகத்தாற் சென்ற சனிக்கிழமையன்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் ஒரு பொது ஜன வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. பெருந்தொகையான ஆடவரும் மகளிரும் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர்.

அரசாங்கசபை அங்கத்தவர் திரு. S. நடேசன் தலைமைவகித்தார்.

ஆரம்பத்தில், செல்வன் க. இ. நடராஜாவால் தமிழ்த்தாய் வணக்கம் பாடப்பெற்றது.

தமிழ்ச் செய்யுளில் யாக்கப்பெற்ற வரவேற்புப் பாக்கள் பனையோலை ஏட்டில் எழுதப்பெற்று வெள்ளி பதித்த மர அட்டையையுடைய தாய், கொக்குவில் திரு. அ. குமாரசுவாமிப்பிள்ளையாற் படித்துக் கொடுக்கப்பட்டது.

திரு. S. நடேசன் பேசியவற்றின் சாரம் வருமாறு:—

இன்று ஒரு பெரிய நிகழ்ச்சியைக் கொண்டாடுதற்காகக் கூடியிருக்கிறோம். தமிழர்களுடைய கனவு இன்று நனவாயிற்று. தமிழ்ப் பேராசிரியர் பதவிக்குச் சுவாமிகள் வந்தமை இலங்கைக்கே கௌரவம் விளைப்பதொன்று. அவர்கள் தமிழுக்குச் செய்த சேவைகள் இந்தியாவிலும் இலங்கையிலும் நன்கறியப்பட்டன. ஒரு சந்நியாசியாக இருப்பதால், சுவாமிகள் பண்டைக் காலத்து அரசர்கள் தமிழுக்குச் செய்தவற்றினும் பார்க்க அதிகமான சேவையைச் செய்யலாம். சுவாமிகளை இக்காலத்து அகஸ்தியர் என்று நான் கூற விரும்புகிறேன். தொல்காப்பியர்தாமும் இயற்றமிழை மட்டுமே பேசினார். சுவாமிகளோ முத்தமிழையும் ஆராய்ந்துள்ளமையால், அவரினுஞ் சிறந்தவர் என்று கூறக் கூடிய நிலையிலிருக்கின்றார். தமிழின் மூன்று பகுதிகளுக்கும் சுவாமிகள் ஆக்கமளிப்பாரென்பதிற் சந்தேகமில்லை. பழையனவற்றிலுள்ள சிறந்தவற்றோடு புதியவற்றிலுள்ள நல்லனவும் சுவாமிகளிடம் நிறைந்திருக்கக் காணலாம். சுவாமிகள் விஞ்ஞான சாஸ்திரத்துக்கேற்ற தமிழ்ச்சொற்களை ஆக்குதற்காக ஏற்பட்ட சபையின் தலைவராயிருந்தவர். அவர்கள் நாடகத்தமிழ், இசைத்தமிழ் ஆகிய பகுதிகளிற் செய்த ஆராய்ச்சிகள் தமிழ்ப் பாஷைக்கு ஆக்கந்தருவன. அவருடைய இசைநூல் வெளிவருங் காலை நாம் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்."

திரு. J. V. செல்லையா பேசியவற்றின் சாரம் வருமாறு:—

சுவாமிகள் பல துறை போகிய ஒருவர். வெறுமனே மாணவர்களுக்குப் பயன் சொல்லிக் கொடுப்பதில் மாத்திரம் தம் காலத்தைப் போக்காமல், ஆராய்ச்சித்துறையிலும், தமிழ் கற்றற்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்துவதிலும் செலவு செய்வாரென்று நான் எதிர்பார்க்கிறேன். பிரான்ஸ் நாட்டில் பிரான்ஸிய ஆராய்ச்சிக் கழகம் (Frnceh-Academy) இருப்பதுபோல, உண்மையில, தாமாகவே புதிதாகத் தமிழ்மொழிக்கு நூல்களைச் செய்து தவுவோரைக் கொண்ட ஒரு "தமிழ் ஆராய்ச்சிக் கழகமும்" அமைக்கப்பட வேண்டும் என்று நான்கருதுகிறேன். இவ்வாராய்ச்சிக் கழகமே நூல்களை அரங்கேற்றுதற்குரிய நிலையமாக இருக்கவேண்டும். தமிழ் நூல்களின் தராதரத்தை மதிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். தமிழ்ப் பாரம்பரையைப் பற்றிக் கூறும் நூல்களைப் பகுதி பகுதியாகஎழுதும் சபையொன்றை நிறுவி அந்நூல்களைத் திருத்திவெளியிடும் பிரதம பதிப்பாளர்களாகச் சுவாமிகள் இருத்தல வேண்டும். சுவாமிகள் இலக்கிய ஆராய்ச்சிக்குச் சிறந்த ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டும்; அது ஏனைய வெளியீடுகளுக்கு முன்மாதிரியாக இருத்தல்வேண்டும். காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த தமிழ் வசனநடையைச் சுவாமிகள் மீண்டும் புதுப்பிக்கவேண்டும். சிலர் கரடுமுரடான தமிழில் எழுதுகிறார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இனிய எளிய நடையில் எழுதினார்."

காதி எஸ். எம். அபூபக்கர் முஸ்லீம்களின் சார்பாகச் சுவாமிகளுக்குப் பாராட்டுக்கூறினார். அதுகால முஸ்லிம்களும் தமிழ்ப்பேசும் மக்களாயிருப்பதால், சுவாமிகளின் நியமனம் முஸ்லிம்களுக்குப் பெருமகிழ்ச்சி பயக்கின்றது என்று தெரிவித்தார்.

பிரமஸ்ரீ J. T. சதாசிவஐயர் சர்வகலாசாலையில் சுவாமியவர்கள் பேராசிரியராக இருப்பது தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்றும், சிங்களநாட்டிலும் தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ்மொழியொலியும் கேட்பதற்குக் காரணராயிருப்பவர் முஸ்லீம்களென்றும், அதனைத் தாம் வித்தியாதரிசியாகக் கடமையாற்றும்போது நேரிற் காணக்கூடியதாக இருந்ததென்றும், சுவாமிகள நீடுவாழ இறைவனை வேண்டுவதாகவுங் கூறினார்.

சுவாமிகள் பதிலுக்கு முகத்தாற் பேசியவற்றின் சாரம் வருமாறு:-

இன்று என்மீது நீங்கள் காட்டிய அன்புக்கும் அபிமானத்துக்கும் என் உள்ளம் மிகவும் கனிகின்றது. பலவேறு சமயக் கொள்கையாளரையும் பிணித்து ஒற்றுமைப் படுத்துவது தமிழ்மொழியாகும். தமிழ்க் கல்வியின்பால் சிங்களவர் மிக்க அநுதாபம் காட்டுகிறார்கள் என்பதை நான் திட்டமாகக் கூறக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் முதன்முதல எனக்குப் பாராட்டுக்கூட்டம் நிகழ்த்தியசபை கொழும்பிலுள்ள புத்தசமோதரச் சங்கமாகும். தலைமை யாசிரியர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளில் சம்ஸ்கிருதத்தையும் ஒரு பிராசின பாஷையாகச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இந்தியக் கலையில் ஊக்கங் காட்டும் எவரும் சமஸ்கிருத பாஷையைக் கற்றல் வேண்டும். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரிருக இருந்த இலங்கைத் தமிழ்ப் புலவர்களெல்லோரும் சம்ஸ்கிருதத்திலும் பாண்டித்தியமுடையவராக இருந்தனர். இந்தக் கலைகளுக்குச் சமஸ்கிருதம் ஒரு பொக்கிஷசாலை போன்றது.

சம்ஸ்கிருதம் கற்கும்போது அதைத் தமிழ்மூலமாகக் கற்கவேண்டுமேயன்றி ஆங்கிலத்தின் மூலம் கற்றல்கூடாது. பாடசாலைகளில சமஸ்கிருத கலவி கற்பிக்கப்படக் கூடியதாக அது ஆசிரிய கலாசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள வித்தியார்த்திகள் என் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பார்களென்று நம்புகிறேன்."

திரு. V. நாகலிங்கம் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## காந்திஜீ பற்றிய பிரசங்கத்திற்குத் தடை

### ஊர்வலம் நடத்தவும் அநுமதியில்லை

பம்பாய் செப் 30—

மதுங்காவிலுள்ள குஜராத்தி சேவா மண்டலம் பம்பாய் தென்னிந்திய சங்கம், பம்பாய் கோள சமாஜம் ஆகியவற்றின் ஆதரவில் மகாத்மாவின் வாழ்க்கையைப் பற்றியும் அவரது உபதேசங்களைப்பற்றியும் தொடர்ந்தாற்போற் சில பிரசங்கங்கள் நடத்த ஏற்பாடு செய்து பிரவேசச் சீட்டுமூலம் அந்தப் பிரசங்கங்களுக்கு ஜனங்களை அநுமதிப்பதென்றும் வசூலாகும் பணத்தை வங்காளக் கஷ்ட நிவிர்த்தி நிதிக்கு அனுப்புவதென்றும் முடிவுசெய்தனர். பொலீஸ் கொம்மிஷனர் இச் சட்டத்துக்கு அநுமதி அளிக்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

பஞ்ச நிவிர்த்திக்குப் பொருள் திரட்ட மேற்படி ஸ்தாபனங்கள் அக்டோபர் 2ந் திகதி ஓர் ஊர்வலம் நடத்தவும் அநுமதிக்கப்படவில்லை.

---

## வசாவிளானுக்கு உள்நாட்டு மந்திரியின் விஜயம்

### வீடுவாசல்களை இழந்த மக்களுக்கு உறுதிமொழி

யாழ்ப்பாணம் அக் 3—

உள்நாட்டு மந்திரி திரு. மகாதேவா நேற்று இங்கு வந்துசேர்ந்தார். வசாவிளான்–பலாலிப் பகுதியிற் சில தொழிலாளர்களால் ஏற்பட்ட சேதங்களை நேரிற் காணவே இவர் வந்திருக்கிறார்.

இப்பகுதியின் அரசாங்கசபைப் பிரதிநிதியான திரு. எஸ். நடேசனுடன் திரு. மகாதேவா காரிற் சென்று எரிந்த வீடுகள் இருந்த இடத்தைப் பார்வையிட்டார். ஏறக்குறைய இரண்டுமணி நேரம்வரை தாமதித்து அங்கு வீடுகளையுஞ் சொத்துக்களையும் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் மக்களின் முறைப்பாடுகளைக் கேட்டார். அவர்களுக்கு நஷ்டஈடு கட்டாயம் அளிக்கப்படுமென்று உள்நாட்டுமந்திரி உறுதிகூறினர்.

வடமாகாண உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டெண்டான திரு. எம். ஜே. மாணிக்கம் உதவி மதுபரிபாலனக் கொமிஷனரான திரு. ஜே. எஸ். நிக்கலஸும் அச்சமயம் சமுகமாயிருந்தனர்.

## மொலமுரேயின் பெரிய வெற்றி

### 17451 அதிகப்படியான வாக்குகள் பெற்றார்

பலாங்கொடை உபதேர்தல் முடிவு

இரத்தினபுரி அக் 3—

பலரது கவனத்தைக் கவர்ந்திருந்த பலாங்கொடை உபதேர்தலின் முடிவு இன்று கச்சேரியில் அறிவிக்கப்பட்டது. திரு. ஏ. எப். மொலமுரே 17,451 அதிகப்படியான வாக்குக்களால் பார்ன்ஸ் ரத்வத்தை திஸாவையைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்.

தேர்தல் முடிவுகளின் விபரம்;

திரு. மொலமுரே 24526
திரு. ரத்வத்தை திஸாவை 7075
அதிகப்படியான வாக்குகள் 17451
செல்லுபடியாகாதவாக்குக்கள் 90

### திரு. மொலமுரே பேச்சு

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபின், திரு. ஏ. எப். மொலமுரே பேசும்போது தமது வெற்றி அந்தத் தொகுதியிலுள்ள ஒவ்வொருவரினதும் வெற்றியாகுமென்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தத் தேர்தலில் இலங்கை மக்களெல்லோரும் கவனிக்கவேண்டிய சில உண்மைகளிருக்கின்றன. இத்தீவில் இதுகாலை ஏழைமக்களின் கைகளில்தான் அதிகாரமிருக்கிறது என்பது இந்த அம்சங்களில் முதலாவதாகும். நான் ஒரு ஏழையென்பது உங்களெல்லோருக்கும் தெரியும். என்னை ஆதரித்தவர்களும் ஏழைமக்கள்தான். எமது எதிர்க்கட்சிக்கு, பணக்காரர், செல்வாக்குள்ள பிரமுகர்கள், அரசாங்கசபை அங்கத்தவர்கள் ஆகியோரின் ஆதரவு இருந்தது. ஆனால், அந்தப் பிரமுகர்களுக்கெல்லாம் இந்தத்தொகுதி வாக்காளர்கள் ஒரு நல்ல பாடம் கற்பித்தார்கள். அதனை அவர்கள் சீக்கிரம் மறந்துவிட மாட்டார்களென்று நான் நம்புகிறேன்."

"பணத்திமிர் பிடித்த ஆலைவதனால் எவ்வித செல்வாக்கும் பெறமுடியாது என்பதுதான் அந்தப் பாடமாகும். சென்ற காலத்தில மக்களுக்கு உதவிசெய்த ஒருவர் மீது மக்கள் கொண்டிருக்கும் அபிமானத்தையும் அன்பையும் பணத்தினால் குலைக்க முடியாதென்பது இந்தத் தேர்தலின்மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது.

இந்தத் தேர்தல், தமக்கும் திரு. ரத்வத்தைக்கும் இடையில் நடைபெற்ற ஒரு போராட்டமல்லவென்றும் ஆனால் தமக்கும் திரு. பண்டாரநாயகாவுக்கும் இடையில் நடைபெற்ற ஒரு போராட்டமே யென்றும், அந்தப் போராட்டத்தில் தோல்வியடைந்தவர் திரு. பண்டாரநாயகாதானென்றும் அவர் கூறிவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"இந்தத்தீவில் வசிக்கும் மக்களின் சுதந்தரத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்க எவராலும் முடியாதென்பதை இந்தத்தொகுதி வாக்காளர்கள் திரு. பண்டாரநாயகாவுக்கும் அவருடைய சகாக்களுக்கும் பட்டவர்த்தனமாகக் காட்டிவிட்டனர். இந்தத் தேசத்தில கொடுங்கோன்மையோ, அல்லது எதேச்சாதிகாரமோ, அல்லது தான்தோன்றித்தனமோ இனி என்றுமே அதிகாரம் செலுத்த முடியாதென்பதையும், அவற்றினால் மக்களின் மனோ உறுதியைக் குலைக்க முடியாதென்பதையும் இந்தத் தேர்தல் நிரூபித்துவிட்டது.

அடுத்ததாகத் திரு. ஜே. எல். கொத்தலாவலை பேசுகையில் தகுந்த ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதற்குப் போதிய புத்தி சாதுரியம் பலாங்கொடை வாக்காளர்களுக்கு இருக்கிறதென்பதைத் திரு. மொலமுரேயைத் தெரிந்தெடுத்ததன் மூலம் அவர்கள் நிரூபித்துவிட்டார்களென்று கூறினார்.

பதினேழு அரசாங்கசபை அங்கத்தவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் திரு. பண்டாரநாயகாவுக்கு வாக்களித்துக்கொண்டு வந்து திரு ரத்வத்தையை ஆதரித்தும் அவர்களின் முயற்சி சின்னாபின்னமாகிவிட்டதென்றும், அவர் குறிப்பிட்டார்.

முகாந்திரம் பி. வகவெல, திரு. டபிளயூ. தஹநாயகா ஆகியோரும் கூட்டத்திற் பேசினார்கள்.


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ம் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ம் திகதியிலிருந்து 30-ம் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளை ஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)

### தேவை

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ் கொம்பனிக்கு ஒரு ஸ்ரோர் கீப்பரும், ஒரு இராக்காவலாளியும், ஒரு பகற் காவலாளியும் தேவை. திறமை வாய்ந்தவர்களாயும், இளைப்பாறியோராகியுமுள்ள பொலீஸ் காரர்களே தராதரப் பத்திரங்களோடு அக்டோபர் மாதம் 15-ம் திகதி காரியாலயத்தில் (பருத்தித்துறை பஸ் நிலையம்) நேரில் மனுச் செய்துகொள்க.

ஸ்டோர் கீப்பருக்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூபா 50. காவல்காரர் ஒவ்வொருவருக்கும் ரூபா 30.

காரேஜ் மானேச்சர்

Mis—132A7-10.43


### காந்தி ஜயந்திவிழா

இகழும் புரட்டாதி௴ 2-ம் தேதி சனிக்கிழமை மாலை 7 மணியளவில் வண்ணார்பண்ணை கில்னர் மண்டபத்தில் காந்தி சங்க இளைஞர்களின் முயற்சியின் பயனாகக் காந்திவிழா திரு. S. H. பேரின்பநாயகம் B. A. அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

'வந்தேமாதா' கீதத்துடன் கூட்டம் தொடங்கியது. தலைவர் முன்னுரை கூறினார். பின் திரு. C சுப்பிரமணியம் B. A. அவர்கள் காந்தியின் கொள்கைகளை விரித்துரைத்தார். அதன்பின் பேசிய திரு. S. C. சிதம்பரநாதன் அவர்கள் காந்திஜீயின் அடிப்படையான கொள்கைகளையும் அவர் செய்து வரும் சிறந்த சேவைகளையும் சுருங்கச்சொல்லி விளக்கவைத்தார். இதன்பின், தேசிய கீதங்கள் திரு. வை. இரத்தினம்பிள்ளை யவர்களாலும் செல்வி, லீலாவதி, செல்வன் ஞானசுந்தரம் என்பவர்களாலும் பக்கவாத்திய சகிதம் பாடப்பட்டன. பின்னர் அவைத்தலைவர் அவர்கள் முடிவுரை கூறினர். காரியதரிசி சங்கத்தின் சார்பாக அனைவருக்கும் நன்றிகூறினார். கூட்டம் செல்வன் ஞானசுந்தரம் பாடிய தோத்திரத்துடனும் மகாத்மாவுக்கு ஜே என்ற கோஷத்துடனும் இனிது நிறைவேறியது. —கடித

## அரசாங்கப் பாடசாலைகளில் அரசியற் கூட்டங்கள்

### நடைபெறும் வழக்கம் நிறுத்தப்படவிருக்கிறது

அரசாங்கப் பாடசாலைகளில் அரசியற் கூட்டங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக வித்தியாகர்த்தர் அரசாங்கப் பாடசாலைகளின் தலைமையாசிரியர்களுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறார். அதில் பெரும்பாக வித்தியாதரிசியின் அநுமதியின்றி பாடசாலைக் கட்டிடங்களில் அரசியற் கூட்டங்களாவது தனிப்பட்டவர்களின் கொண்டாட்டங்களாவது நடைபெற அநுமதிக்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது.

அநேக பகுதிகளிற் பிரதானமாகச் சபைகள, பட்டினசபைப் பகுதிகளில அரசாங்கப்பாடசாலைக் கட்டிடங்களைத்தவிர, வேறுகட்டிடங்களில்லாமையால், ஸ்தல ஸ்தாபனங்களின அங்கத்தவர்களாக வரவிரும்புவோர் தேர்தற் கூட்டங்களுக்கு அக்கட்டிடங்களை உபயோகிப்பது சர்வசாதாரணமாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. சில சமயங்களில தேர்தல சம்பந்தமான கூட்டங்கள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தையோ ஆலோசனையையோ எதிர்ப்பதற்காகவோ ஆதரிப்பதற்காகவோ நடத்தப்படும் கூட்டம் என்ற வெளிவேஷத்தோடு நடைபெறுவதும் உண்டு.

## களுத்துறையிற் காணப்பட்ட விநோதப் பொருள்கள்

களுத்துறை, அக், 3—

கடலில் இரண்டும் நதியில் ஒன்றுமாக மூன்று பொருள்கள் காணப்பட்டமையின் காரணமாக நேற்று நகரிற் சில மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது.

புதிதாகக் கண்டெடுக்கப்படும் விநோதப் பொருள்களைத் தொடாதிருக்கவேண்டுமென்று பலமுறை வெளியிடப்பட்டிருக்கும் எச்சரிக்கைகள் இங்கு பிரயோசனப்படவில்லையென்று தெரிகிறது.

நதிக்குக் குளிக்கச்சென்ற சிறுவனொருவன நதியிற் கிடந்தானுல் தைக்கப்பட்டிருந்த போத்தலைப் போன்ற வஸ்து ஒன்றைக் கண்டு அருகிலுள்ள தோட்டமொன்றுக்கு எடுத்துச் சென்றான். இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட ஏ. ஆர். பி. அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் தகவல தெரிவித்தனர். இராணுவ அதிகாரிகள் வந்து அதை அப்புறப்படுத்தினர்.

மற்ற இரண்டு பொருட்களையும் ஒரு செம்படவர் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டுசென்றார். அதிர்ஷ்டவசமாக அப்பொருள்கள் புகைமிதப்புகளாக இருந்தன.


## புதிதாகவந்துள்ள தினிசுகள்

அச்சிட்ட பருத்தி வொயில் சேலைகள்
சேலம், கோயம்புத்தூர்ச் சேலைகள்

சகலவிதமான சந்தர்ப்பங்களுக்கும் தகுதி வாய்ந்தது.

கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில்

பெனரிஸ்சேலைகள், பட்டுகள், ரிஸ்யூக்கள், பங்களூர், காஷ்மீரச் சுத்தமான பட்டுச்சேலைகள்.

ஓரளவு ஸ்டாக்குகளே இருக்கின்றன.

...விரைவில் வாங்கிக்கொள்ளுங்கள்...

யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்கம்பனி.

(Mis. 124. 30.9.43—7,14-10-43)

## அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், சிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், சிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

## குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 7, October, 1943.